செய்தி வெளியீடு எண். 226 நாள்: 26.04.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் ஆசிரியர் தகுதித் தேர்வு நடைபெறும் மையங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

~~~~~

திருவள்ளூர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல் நிலைப் பள்ளியில் ஆசிரியர் தகுதித் தேர்வு மையத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (29.04.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது

திருவள்ளூர் மாவட்டத்தில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக ஆசிரியர் தகுதித் தேர்வு 29.04.2017 (தாள்-1) அன்று 28 தேர்வு மையங்களில் 11407 தேர்வர்கள் எழுதுகின்றனர். நாளை 30.04.2017 (தாள்-2) 37 தேர்வு மையங்களில் 15061 தேர்வர்கள் தேர்வு எழுதவுள்ளனர். மொத்தம் 26468 தேர்வர்கள் தேர்வு எழுதகிறார்கள். அனைத்து மையங்களிலும் 6 நிலைக் குழுக்கள் நியமக்கிப்பட்டு 168 நபர்கள் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். தேர்வு நடைபெறுவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் மாவட்ட நிர்வாகம் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளது என்று கூறினார்.

இன்று (29.04.2017) நடைபெற்ற தேர்வில் 11407 தேர்வர்களில், 10942 தேர்வர்கள் தேர்வு எழுதினார்கள், 465 தேர்வர்கள் தேர்வு எழுத வரவில்லை.

இவ்ஆய்வின் போது மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.த.ராஜேந்திரன், மாவட்ட கல்வி அலுவலர் திருமதி. லில்லிபுஷ்பம் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~